தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஹூ கார்த்திகை மீ 4உ (19-11-'22.) | ப. 29.

விஷய அடக்கம்.

1. உலக நடை 299
(உதவி பத்திராதிபர்)

2. சாரதா ஸல்லாபம் ... 300
(சாரதா)

3. தமிழ்ப் புலவோரும் தமிழ் நாடும் ... 300
(நவநீத கிருஷ்ண பாரதியார்)

4. நாயன்மாரும் ஆழ்வார்களும் ... 302
(துணைப் பத்திராதிபர்)

5. "வெள்ளையர் அடிமை" வர்த்தகம் ... 302
(வெ. நா. ராமநாதன், B. A., B. L.)

6. ஐ. ஸி. எஸ். பரீக்ஷை ... 304
(S. பட்டாபிராமன், M.A., பத்திராதிபர்)

7. புயற் காற்று ... 305
(V. நாராயணையர், M.A., M.L.)

8. லீலையை நினைந்து புலம்புதல்... 307

தமிழ் உலகு

(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்

தமிழ் வாரப் பத்திரிகை

பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

'தமிழ் உலகு' காரியாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்,

மைலாப்பூர், சென்னை.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் டி. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16. 'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

உம்மிடி ராமய்யசெட்டி குருசாமிசெட்டி கம்பெனி

நம்பிக்கையான நகை வர்த்தகர்கள்
25, சைனாபஜார் ரோட், மதராஸ்

ఉమ్మిడి రామయ్య శెట్టి, గురుసామి శెట్టి
కంపెని
నగల వర్తకులు
25, చైనా బజార్ రోడ్డు, మదరాసు.

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமிமுதலியார் எழுதியது

		ரூ.	அ.
இந்திரா பாய்	...	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்			
சுந்தர சிங்	...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை			
அம்புஜாக்ஷி	...	2	0

வி. நாராயணன் கம்பெனி,
4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

லோகோபகாரி.

ஆசிரியர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை.

நல்ல வாரப் பத்திரிகையை விரும்பு கிறீர்களா?
புத்துயிர் பெற்றுப் பொற்படைய விரும்புகிறீர்களா?
இன்பமான பொழுது போக்கை விரும்பு கிறீர்களா?
சிறந்த செந்தமிழ்ப் பாடல்களை விரும்பு கிறீர்களா?
தேசத்தில் நடக்கும் செய்திகளை அறிய விரும்பு கிறீர்களா?
வேதாந்தம் படிக்க விரும்புகிறீர்களா?
உலக விநோதங்களை அறிய விரும்பு கிறீர்களா?

அவ்வாறானால், சென்னையிலிருந்து சென்ற இருபது வருஷ காலமாக வியாழன் தோறும் வெளிவரும் லோகோபகாரிக்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள்.

வருஷ சந்தா ரூபாய் நாலே—மாதிரிப் பிரதி இனாம்.

காரியஸ்தர்,
"லோகோபகாரி," சென்னை.

பணம் திருப்பி கொடுக்கலாம்

ஒரு வருஷம் எங்கள் நிபந்தனையின்படி படிப்பவர்கள் இங்கிலீஷ் பாஷையில் குறைந்தபக்ஷம் 4-வது பாரம் வரையுள்ள படிப்பாவது அடையலாம்.

ஜோலிக்கு இடையூறில்லாமல் தங்கள் வீட்டிலிருந்தே கற்றுக்கொள்ளலாம்.

எப்பொழுதும் முன் பணமாக

வருஷசந்தா ரூ 10—8—0

புஸ்தகங்கள் ஒரே மொத்தமாக கொடுக்கமாட்டோம். எங்கள் ஸ்தாபனத்தில் ஒரு வருஷத்திய படிப்பை யடைந்தவர்களுக்கும், 4-வது பாரம்வரை படித்தவர்களுக்கும் 3வருஷம் கொண்டு பல விதத்திலும் இந்தியன் யூனிவர்ஸிடி B.A. பரீக்ஷைக்கு சமமான லண்டன் மெட்ரிக்குலேஷன் பரீக்ஷைக்கு சேருவதற்கு நாங்கள் மாணாக்கர்களை தயார் செய்கிறோம்.

ஏராளமான கம்மிஷனுக்கு வேலைசெய்ய ஏஜெண்டுகள் தேவை.

E. C. School,
Trivandrum.

இந்த பேப்பரின் பெயர் சொல்லிவரக்கூடிய ஆர்டர்களுக்கு சந்தா தொகையில் அணா எட்டு குறைவு செய்யப்படும்.

இந்தியாவுக்கு ஸ்வாதீனம்

அதன் அவசரம்.

பரிபூரணமான ஸ்வதந்திரம் உடனே பெற்றாலன்றி பாரத மக்கள் பண்புடன் வாழ முடியாதென்று பரிசுத்த ஆத்துமாவாகும் ஆண்ட்ரூஸ் எழுதியுள்ள வியாசத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு. பிரிடிஷ் ஆட்சியினால் இந்திய மகா ஜனங்கள் பரம க்ஷீண தசையடையலாயின ரென்றும், இதை இந்தியர் உணர்ந்து, ஒத்துழையாமையை மேற்கொள்ளின், பிரிடிஷ் ஆட்சியின் அடிப்படை அற்றுப் போகுமென்றும், ஆங்கில மேதாவி ஸீலி முன்னமேயே கூறி யிருப்பதை ஆண்ட்ரூஸ் எடுத்துக் காட்டி, சுயராஜ்ய வாழ்வுக்கு ஒப்பற்றசாதனம் ஒத்துழையாமை தர்மமேயென விளக்கிச்சொல்லி யிருக்கிறார். ஸ்ரீ பாரத மாதாவின் நவரத்ன மாலையென்னும் அரிய ஒன்பது பாக்களும் அடங்கியுள்ளது.

விலை அணா 0—4—0

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

உலக நடை

[உதவி பத்திராதிபர்]

ஆங்கில தேசத்தில் சிறப்புற்று விளங்கும் மான்செஸ்டர் கார்டியன் என்னும் பத்திரிகையின் நிருபர் இவ்விந்தியாவில் சுற்றிப்பார்த்து தான் கண்டும் கேட்டுமறிந்த விஷயங்களை எழுதி வருகின்றார். அகாலியர் போராட்டத்தைப்பற்றி சமீபத்தில் அவர் எழுதியிருக்கும் குறிப்புகள் கவனிக்கத்தக்கன. போராட்டமாரம்பித்த காரணங்களை விவரமாய் வரைந்தபின், பஞ்சாப்பில் அரசாங்கத்தாரிடம் ஜனங்களுக்கு நம்பிக்கைக்குறைவே நெடுங்காலமாக இருந்துவருவதென்றும் இதனாலேயே தான் விடாமுயற்சியுடன் அகாலியர்கள் சாத்வீகப்போர்செய்துவருகிறார்கள் என்றும், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தாங்கள் நாடும் கௌரவத்தை நீக்கி, பணிந்தாலொழிய இக்கலகம் அடங்காதென்றும் விளக்கியிருக்கிறார்.

இந்திய அரசாங்க ஸபையின் அங்கத்தினராக அமர்ந்து இப்போது அதைவிலக்கிவிட்ட பூர்க்ரியென்பவர் இந்தியாவிஷயங்களைப்பற்றி விசாரிக்கத் தம்மிடம் அணுகிய ஓர் ஆங்கிலப் பத்திரிகையின் நிருபரிடம் கீழ்க் கண்ட செய்தியை விடுத்துள்ளார். சீர்திருத்தங்களை ஒத்துக்கொண்டு இந்தியர்கள் அவைகளைக் கொண்டாடமாட்டார்கள்; ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் வெகுகாலமாய் பற்றிவந்த அதிகாரத்தை இழக்க இணங்கார்கள் என்பதே இதற்கு காரணம்; அரசாங்க செலவும் இராணுவச்செலவும் ஏழை இந்தியர்களை வருத்துகின்றன; இந்தியர்களுக்கு சுய ஆட்சி அளிக்க வேண்டுமென்று ஆங்கிலேயர்கள் விரும்பினால், முதன்முதலாக இந்தியர்களிடம் முழு நம்பிக்கையுடன் அவர்களுக்கு இராணுவத் தேர்ச்சி செய்விக்கவேண்டும்; பின்னர் ஆங்கிலேயர் மேம்பட்டார் என்று பாராட்டுவதை நிறுத்தி ஸரி ஸமமாக இந்தியர்களுடன் பழகவேண்டும்.

கிலாபத் கம்மிட்டியும் பொதுச்சட்ட மறுப்புக்கு ஏற்றதருணம் இதன்றென்றும், தங்களுடைய நோக்கங்களுக்கு மாறாக இடப்படும் நிர்பந்த சட்டங்களுக்கு யாவரும் எச்சமயத்தும் உடன்படாது மறுக்கலாமெனவும் தீர்மானித்திருக்கிறார்கள். சட்டஸபை புகுதல் அறவே யொழித்திட வேண்டுமெனவும், கள்ளுக்கடை, அன்னிய நாட்டுத்துணிகள் இவைகளில் மறியல்வேலை உடனே துவங்கவேண்டுமெனவும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. பர்மாவிலும் ஒத்துழையாக் கட்சியினர் சட்டஸபை பஹிஷ்காரத்தில் மும்முரமாய் ஈடுபட்டு வெற்றிபெறக் கூடிய அறிகுறிகள் காண்கின்றன. ஜனங்களின் மனோவலிமைமுன் அதிகாரி வர்க்கத்தினரின் தேகபலம் எம்மட்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

இதனிடையே, நம் ராஜதானியில் நியாயக் கட்சியார், •இங்கிலாந்தில் இப்போது நடைபெற்று வரும் சட்சிப்பிரசாரங்களைப்போல், பிரசாரங்கள் துவங்கியிருக்கிறார்கள். பிராமணரல்லாதார் இயக்கமென்பது ஜாதிவித்தியாசத்தால் ஏற்பட்டதன்று என்றும், பல நியாயமான கொள்கைகளைப்பூண்டே இச்சட்சி வெளி வந்ததென்றும், நெடுங்காலமாக இக்கட்சி யிருப்பதென்றும், இப்போதுதான் பலமடைந்திருக்கிறதென்றும், இக்கட்சியார் ஆதீனம் பெற்ற இரண்டு வருஷங்களில் செய்திருக்கும் அரிய நன்மைகள் பல உள என்றும் வெளியிட்டிருக்கிறார்கள். அவ்வரிய நன்மைகள் யாவனவென்பதை சீமான் இராமஸ்வாமி முதலியாரவர்கள் வேலூரில் செய்த பிரஸங்கத்தினின்று சுருங்கக் கூறுவாம்.

வெகு நாட்களாய் வீணில் போராடிய கல்வியபிவிருத்தி விஷயமாய் இப்போது பத்து முனிஸிபாலிட்டிகளில் இலவசக் கட்டாயப் படிப்புக்குள்ள ஸாதனங்கள் செய்யப்பட்டிருப்பதுடன் கிராமவாஸங்களில் ஆரம்பக்கல்வி சௌகரியங்கள் அமைத்து வருகிறார்களாம். கைத்தொழிலபிவிருத்திக்காக அரசாங்க உதவிபெற புதிதாய் ஓர் மசோதா தயார் செய்யப்பட்டிருக்கிறதாம். தர்மஸ்தானபங்களின் நிர்வாகத்தில் குறைகளை கவனிக்க ஓர் மசோதா எண்ணியிருக்கிறார்களாம் நிலவரி சாசுவதத்திற்குப் போராடி வருகிறார்களாம். தாழ்ந்த ஜாதியார் முன்னேற்றத்திற்காக பெரும்பாடு பட்டிருக்கிறார்களாம். எல்லாவற்றிலும் முதன்மையாக அரசாங்க உத்தியோகங்கள் பொதுவாய் ஸர்வ ஜாதியினருக்கும் கிடைக்கும்வண்ணம் பல இடையூறுகளுக்கிடையே, உழைத்து வருகிறார்களாம்.

சென்னை சட்டஸபைமுன் இவ்வாரம் மந்திரி ராய் பகதூர் வெங்கட ரெட்டி நாயுடு அவர்கள் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு அரசாங்க உதவியை நாடி ஓர் மசோதாவை கொண்டு வந்தார். புதிதாக கிளம்பியிருக்கும் கைத்தொழில்களை காப்பாற்றவும், சிற்சில இடங்களில் வசதிகளிருந்தும் வெளிக்கிளம்பாத தொழில்களை தொடங்கவும் உபயோகப்பட இம்மசோதா முற்பட்டிருக்கிறது. கடன் கொடுப்பது, திரவிய ஸஹாயம் செய்வது, இனமாக எரிகருவிகள், நிலம், ஜலம் அளிக்கவும் அரசாங்கம் உதவி செய்யவேண்டிய வழிகள். இவ்வுதவிகளை எற்றவாறு தீர்மானிப்பதற்கு உத்யோகப்பற்றல்லாத அங்கத்தினர்களை அதிகமாய்க்கொண்ட ஓர் ஸபையும் நிர்மாணிக்கப்படவேண்டும். இம்மசோதா பலர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதன் பாகங்களனைத்தும் பரிசீலனை செய்ய நிபுணர்களடங்கிய ஓர் கம்மிட்டியிடம் ஒப்புவிக்கப்பட்டிகிறது.

சென்னை ஸர்வ கலாசாலை சீர்திருத்த மசோதா சட்டஸபை முன் விவாதத்திற்கு இடப்பட்டிருக்கிறது. இதுவரை சென்னை ஸர்வ கலாசாலை பரீட்சிப்பதும் தேர்ந்தவர்களுக்கு பட்டமளிப்பதுமே வேலையாகக் கொண்டது போதாதெனவும், இதனை சீர்திருத்தம் செய்து சென்னையில் பத்துமைல் விஸ்தீர்ணத்திற்குட்பட்ட கலாசாலைகளில் கல்வி போதனையை ஒருவழிப்படுத்த ஸர்வ கலாசாலையே ஏற்றுகொள்வதென்றும் மசோதாவின் கருத்து. இவ்விஷயம் ஸர்வகலாசாலை அங்கத்தினர் முன் விவாதிக்கப்பட்டு பல ஆக்ஷேபணைகளுக்கிடையே நிறைவேறியது. இப்போது சட்டஸபை முன்னும் பலர் ஆக்ஷேபித்துவருகிறார்கள். எனினும், இம்மசோதாவிற்கு நல்வரவு கூறுமவர்களே பெரும்பான்மையோர்.

சாரதா வல்லாபம்

[சாரதா]

ஒருவரே மாந்தர்கட்டு அரசனும் மதகுருவாயு மிருத்தல் தகாதென்பது சொல்லாமலே விளங்கும். ஆதிகாலம் தொடங்கி மஹோபதேசகர்களா யிருந்தவர்களெல்லாம் உலகத்தின் சிறப்புகளை யிகழ்ந்துவிட்டு தம் மதத்தைப் பரவச்செய்தார்கள்; புத்தர் அரசர் குடியிற் பிறந்தும் அச்செல்வத்தைத் துறந்து மேன்மை யடைந்தார். பகவத் அவதாரமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானும் தான் அரசர் குலத்தில் அவதரித்தும் அதற்கேற்ப போரில் சிறப்பெய்தாது, பார்த்தனுக்கு சாரதியா யிருந்தும் தூது சென்றும் தன் மதத்தை உபதேசித்தார். அவ்வாறே கிருஸ்துவும். இப்படிக்கிருக்க, மகமதியர்கள் மாத்திரம் தங்களுடைய மதகுருவும் அரசனும் ஒருவராக வைத்துக்கொண்டிருந்தது உலகியலுக்கு ஒத்து வரவில்லையென்று அறிந்த துருக்கியர்கள் இப்பொழுது அதைப்பிரித்து விட்டது உசிதமான காரியமாகும். இரண்டு விஷயங்களும் நன்றாய் நடைபெறும் என்பதில் ஐயமில்லை. சுல்தானை மதகுருவாக மாத்திரம் வைத்து இராஜ்ய நிர்வாகத்தை ஜனப்பிரதிநிதிகள் கைப்பற்றியது தற்கால நிலைக்கு மிகவும் பொருத்தமாகவே இருக்கிறது. இதை இந்தியாவிலுள்ள மகமதியர்களும் அவ்வாறு அங்கீகரிப்பார்களென நம்புகிறேன்.

இந்தியா ஜன சங்கத்தாரும் மகம்மதியக்கூட்டத்தாரும் சேர்ந்து நியமித்த அறுவர்களும் இத்தேசம் அடங்கா முறையை அனுஷ்டிக்கத்தகுந்த பக்குவம் அடைந்திருக்கிறதா வென்பதைப்பற்றி விசாரித்து, எல்லாரும் ஒரு மனதாய்ச்செய்த தீர்மானங்கள் எல்லாராலும் ஒப்புக்கொள்ளக்கூடியதாயிருக்கிறது. ஒரு விஷயத்தில் மாத்திரம் மூவர் ஒரு விதமாகவும் மற்றவர்கள் ஒரு விதமாகவும் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் அவ்விரு திறத்தாரும் செய்த தீர்மானங்களை நன்றாய் கவனிக்கும்பொழுது வித்தியாசமிருப்பதாகக் காணப்படவில்லை. சட்ட நிர்மாண சபைகளுக்குட் புகுவதே அச்சபைகளை யங்கீகரித்தது போலாகுமெனக் கருதி அது தகாதென்றார் ஒரு சாரார். மற்றொரு சாரார் அச்சபைகளுக்குள் புகுந்து நாம் செய்யக்கூடிய இடைஞ்சல்களால் அச்சபைகளின் பயனின்மையை வெளிப்படுத்த வேண்டுமென்றார். சபைகள் பயனில்லையென்பதே இரு திறத்தாருடைய கொள்கையாகும். இது இவ்வாறாக அச்சபைகளில் பிரவேசித்து அவைகளை யழிக்க எத்தனிப்பதைவிட பிரவேசிக்காமலிருப்பதே நியாயமாகும். ஒருவன் செய்யும் வைத்தியம் வியாதியை நீக்காதென்று தீர்மானித்த பிறகு அதை நன்கு விளக்க எண்ணி அவன் கொடுக்கும் மருந்துகளை உண்டு பத்தியமிருக்க எண்ணுவது எவ்வாறு பயனில்லையோ அவ்வாறாகவே சபைகளில் பிரவேசிப்பதாகும்.

தமிழ் நாட்டு ஜன சங்கத்தில் கோவிலுக்குள் தாழ்ந்த ஜாதியார்கள் பிரவேசிக்கலாமா கூடாதா என்பதைப்பற்றி அதிக சச்சரவு இருந்ததாகத் தெரியவருகிறது. இவ்விஷயத்தை ஆராயுங்கால் சச்சரவிற் கிடமே யில்லையென்பது அறிவுடையோருக்கு நன்கு விளங்கும். எல்லாம் வல்ல இறைவனுக்கெதிரில் எல்லாரும் தாழ்ந்தவர்களே யன்றோ? ஏற்றமும் தாழ்வும் குணத்தாலன்றோ? யான் உயர்ந்தவனென்று அகங்கரித்தவன் அருநரகில் புகத்தக்கவனன்றோ? அடக்கமன்றோ யமாருலகில் சேர்க்கும் சாதனம். இவைகளைக் கவனியாது தங்களுக்குள்ள பொருளாசையால் சிலர் கூடி பிறரை அடக்கியாளக்கருதுவது இக்காலத்திலும் கூடுமோ? அவ்வாறு செய்பவர்கள் யழிவதல்லாது வேறு கதியுமுண்டோ? சர்வ ஜீவன்களிடத்திலும் காருண்யமன்றோ மேன்மையினடையாளம். அதன்றிப் பிறரை யிகழ்ந்து எண்ணுவது கீழ்மையன்றோ? மேன்மக்களது கடமை தாழ்ந்தோரை உயர்த்த எத்தனிப்பதோ அவரை இன்னுமதிகமாக இழிநிலையில் ஆழ்த்துவதோ? இத்தேசம் விருத்தியடைய வேண்டுமானால் தற்காலத்தில் உயர்ந்த ஜாதியாரென தங்களை மதிக்கும் மாந்தர்கள் அவ்வெண்ணத்தை முற்றிலும் அழித்து பொது ஜனங்களை நன்னெறியில் உயக்கவேண்டும். அவ்வாறு உழைப்பவர்களே தேசாபிமானிகள். இதைவிட்டு ஒன்றைப்பேசி மற்றொன்றைச் செய்யும் மருளர்களும் தேசாபிமானிகளெனக்கூடுமோ? கருணையே வடிவாகி வந்த பல சமயாசாரியர்கள் எச்சாதியில் பிறந்தாலும் தெய்வங்களெனத்தொழப்படும் இத்தேசத்திலும் இவ்வித்தியாசங்களுக் கிருப்பிடமுண்டோ? இவைகளுக்காதாரம் அறிவின்மையே யன்றோ? அதை யொழித்த பின்னன்றோ நாமும் தலை நிமிர்ந்து அறிவுடையோர் கூட்டத்தில் செல்ல வழியாகும். இதைக் கவனியாது பிடித்ததே பிடிவாதமாக நடத்துவதும் அழிவை யுண்டாக்குவதல்லாது வேறுண்டோ?

அயர்லாந்து தேசத்தவர்கள் தங்களுக்குள் நடந்த கலகத்தை நிறுத்திக்கொண்டு ஒருவாறாக அமைதியடையுந் தருணத்தில் அத்தேசத்தை இங்கிலாந்தினுடைய சம்பந்தமே யில்லாமல் பிரித்திட எண்ணியுழைத்துவந்த தே வாலரா என்பவர் அவ்வாறாகும் வரைக்கும் தானும் தன்னபிப்பிராயத்திற் கிணங்கியவர்களும் பிரயத்தினம் செய்யாமல் நிறுத்துவதில்லையென்றும் தாங்கள் மரணமடையும் வரையில் இவ்விதமாகச் செய்வதாயும் கூறியதைக் கேட்கும்பொழுது, அவருக்கு புத்தி பிரமை யடைந்து விட்டதோவென சந்தேகமுண்டாகிறது. இவ்வாறான குரங்குபிடி நல்லவிஷயங்களிலிருப்பது தகுமானாலும் பொது நன்மையை உத்தேசித்துப் பாடுபடுவோர்கள் காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து நடந்துகொள்வதே அறிவுடையோருக் கழகாகும். மனோபாவம் எப்படியிருப்பினும் காரியங்களில் முற்றிலும் பாவங்களை அனுஷ்டிப்பது முடியாது. அவைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரும் போதிருக்கும் காலநிலையும் மாந்தர் நிலையும் கருதியே நடக்க வேண்டும். மனோபாவம் அத்வைதத்திலிருப்பினும் காரியத்தில் அதை அநுஷ்டிப்பது உலகம் பழிப்பதற்கிடமாகுமல்லாது வேறுண்டோ?

தமிழ்ப் புலவோரும் தமிழ் நாடும்

[நவநீத கிருஷ்ண பாரதியார்]

நமது நாட்டார் கையில் தமிழ்ப்புலவர்கள் அகப்பட்டுக்கொண்டனர். கூலிக்காரனுக்குக் கிடைக்கும் பொருளேனும் இவர்க்குக் கிடைப்பதில்லை.

இவரது ஆடைகளிலே பல பொத்தல்கள் உண்டு. இரண்டாம் துண்டும் இவர்க்கு இல்லை. இவரது மனஞ் சோற்றையே விரும்பிக்கொண்டிருக்கிறது. கற்பனா சக்தி யிருக்குமிடந் தெரியவில்லை. இன்ன நிலைமையிலுள்ளவர்கள் தமது அறிவை வளர்த்தற்குரிய நூல்களை எங்ஙனம் வாங்கிப் படிப்பர். எவ்வாறு நாட்டுக்கு வேண்டிய நன்மைகளைப் புரிதற்கு உரியவராவர்? பூர்வ ஜன்ம புண்ணிய வசத்தினாலே இரண்டொருவர்க்கு நிரம்பிய புலமை வாய்ப்பெற்றாலும், அவர் தம்மை உலகம் நன்கு மதிப்பதில்லை. இவர் யார் என்று ஒருவர் வினாவினால், 'நான் தமிழ்ப்புலவன்' என்றால்; 'இம்! போய் வாரும்' என்று அவமதிக்கின்றார்கள். இவர்களுக்குப் பெண்ணைக் கொடுப்பது என்றால், அந்தப் பெண்ணைப் பாழுங் கிணற்றிலே தள்ளிவிடுவதற்கு ஒப்பாக நினைக்கின்றார்கள். ஆங்கிலக் கலாசாலை மாணாக்கர்கள் சில போது தமிழ் நூல் வாசிப்பதை அறிந்துவிட்டால் 'ஏடா, சோம்பேறி, தமிழ்ப்புஸ்தகம் படிக்கின்றாயோ' என்று ஏளனம் செய்கின்றனர்.

இவ்வாறாய நிலைமைக்கு நமது பாஷையும் பாஷா பண்டிதர்களும் வந்துவிட்டபடியால், நமக்கு இனிக்குறைவென்பதொன்றுண்டாகுமா? எல்லாருக்கும் ஆங்கில மோகம் பிடித்துவிட்டது. கைச்சட்டை, காற்சட்டை என்னும் இவை முதலாகியவெல்லாம் நம்மவர் மேலே ஏறத் தொடங்கி விட்டன. பக்ஷணக் கடைக்காரர்களும் ஆங்கிலத்திற் கையெழுத்துப்போடுவதையே பெருமையாக நினைக்கின்றனர் என்றால், வேறினியாது சொல்லல் வேண்டும். எங்குப் பார்த்தாலும் ஆங்கிலப் புத்தகங்களே. எங்குப் பார்த்தாலும் ஆங்கிலப் பேச்சுக்களே. நமது உடையிலும் உணவிலும் ஆங்கிலம் வந்து புகுந்துவிட்டது. ஆங்கிலங் கற்றவர் எழுதிய தமிழ்ப் புத்தகத்திற்கும் பேசுந் தமிழ்ப்பேச்சுக்கும் ஒரு சில இடங்களிலே மதிப்பு உண்டு என்று கூறுவதற்கு இடன் இருந்து வருகிறது.

பழைய தமிழ் நூல்களெல்லாம் கறையானுக்கு உணவாகி வந்தது; வருகின்றது; வரும். புறநானூறு என்னும் புஸ்தகத்தைப் பார்த்தால் அந்த வுண்மை நன்றாகப் புலப்பட்டுவிடும். இந்த நூல் மூன்று சங்கத்துப் புலவர்கள் பாடிய அருமையான பாடல்கள் பலவற்றைக் கொண்டிருக்கின்றது. பழைய சரித்திரங்களையும், பழைய நாகரிக முறைகளையும் தமிழரசர்களின் வீரம், கொடை, ஆட்சிமுறை, புலவர்களின் பெருமை, கைத்தொழில், இயற்கைக் கவிகளின் மேன்மை முதலாகிய பலப்பல விஷயங்களையும் தன்னகத்திலே வைத்துக்கொண்டிருக்கும் ஓர் அரிய பொக்கிஷம். தமிழ் மக்களின் உயிர் நிலையம். தமிழ் மக்களையும் பாஷையையும் பழைய நிலைமைக்குக் கொண்டுவரும் ஒரு பெரும் தெய்வம். இவ்வருமையான நூல் எந்த நிலையிலிருந்து வருகின்றது என்று சற்று நோக்குவாம். சில பாக்கள் காணப்பெறவில்லை; சில பாக்களுக்கு முதலில்லை; சில பாக்களுக்கு இடையில்லை; சில பாக்களுக்குக் கடையில்லை; சில பாக்களுக்கு உரையில்லை; சில பாக்களுக்குப் பாடினார் பெயரில்லை; சில பாக்களுக்குத் திணை துறைகள் இல்லை. இந்த அருமையான நூலை இந்த நிலையில் வைத்திருந்தால் அங்ஙனம் வைத்திருக்கும் நம்மைப் பிறர் எங்ஙனம் மதிப்பார்கள் என்று நீங்களே சற்று ஆலோசிப்பீர்களாக.

சேர ராஜர்களைப்பற்றிப் பாடிய பதிற்றுப்பத்து என்னும் நூலுக்கு முதலும் கடையுமே இல்லை. பத்திச்சுவை பழுத்துச் சொட்டும் பழந்தமிழ்ப் பனுவலாகிய பரிபாடல் கதியைச் சொல்லவேண்டியதில்லை. கலையுந் திருவும் குணமும் உருவும் இளமையும் படைத்திட்ட ஒரு நங்கையைச் சித்திரவதை செய்திருப்பது போலவே அந்நூல் காணப்படுகின்றது.

வளையாபதி, குண்டலகேசி முதலாய பல பெருங் காவ்யங்கள் இருந்தவிடமும் அறியப்பெறாமல் அழிந்து போய்விட்டன.

முற்காலங்களில் கடல் வந்து நமது நூல்கள் பலவற்றையும் உண்டொழித்துவிட்டது. இடையிடையே நெருப்பும் வந்து உண்டு சென்றது. கறையானும் உண்டு ஏப்பம் விட்டுக்கொண்டு வந்தது. இப்பொழுது நாமே அவற்றை உண்டு வருகின்றோம். உண்டு வருகின்றோம் என்றால் படித்து வருகின்றோமென்று அர்த்தம் பண்ணிவிடல் கூடாது. அந்தக் கடல் முதலாயின நமது நூல்களை எங்ஙனம் படித்து வந்தனவோ அங்ஙனமேதான் நாமும் தமிழ் நூல்களைப் படித்து வருகின்றோம்.

அல்லும் பகலும் அனவரதமும் நெற்றி வேர்வை நிலத்திலே விழும்படிக் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருளை அவனது மகன் சின்னாபின்னப் படுத்தி அழித்துவிட்டதுபோல நமது முன்னோர்கள் அரிதின் முயன்று தேடிவைத்த நூல்களாகிய அரதன மணிகளை வீணாக்கிவிட்டோம். நமது செல்வம் எங்கே இருக்கின்றது? நமது வலிமை எங்கே இருக்கின்றது? நமது இன்பம் எங்கே இருக்கின்றது? நமது செங்கோல் எங்கே இருக்கின்றது? நமது பெருமை எங்கே இருக்கின்றது?

தமிழ்ப் பனுவல்களிடத்தில் அன்றோ! அந்தப் பெருமை வாய்ந்த தமிழ் நூல்களை நாம் அழியவிட்டால் நமக்கு என்ன நேரிடும் என்று உணர்வோமா? இல்லை, இல்லை. சிறிதும் நாம் உணரவே இல்லை. நாம் உணர்ந்திருப்போமென்றால் அவற்றையெல்லாம் இந்த நிலைமைக்குக் கொண்டு வந்திருப்போமா? இந்த நிலைமைக்குத்தான் அவற்றைக் கொண்டுவர உணர்ந்துகொண்டேமேயன்றிப் பிறிதொன்றும் உணர்ந்து கொண்டோமில்லை.

தமிழ் நூல்களை அழித்துக்கொண்டுவரும் நமக்குச் செல்வமும் போயிற்று; வலிமையும் போயிற்று; இன்பமும் போயிற்று; செங்கோலும் போயிற்று; பெருமையும் போயிற்று. இவைகளெல்லாம் போயின என்றால் நாம் எவற்றைத் தாம் அடைந்தோம்? வறுமையை அடைந்தோம்; துன்பத்தை அடைந்தோம், அடிமையை அடைந்தோம்; சிறுமையை அடைந்தோம். இவற்றையெல்லாம் அடைந்திட்ட நாம் நம்மை எவ்வாறு புகழ்ந்து வருகின்றோம்? பெரிய செல்வர்களாகவும், அறிவாளிகளாகவும், உயர்ந்த ஜாதியினர்களாகவும், பெரிய நீதியினர்களாகவும் நினைத்துமட்டுமா வருகின்றோம்? எழுதியும் வருகின்றோம்; பேசியும் மார்பு தட்டியும் வருகின்றோம். இவ்வாறாகிய நாம் இங்ஙனம் செய்துவரல் நியாயமாகுமா? வெட்கம்! வெட்கம்!! வெட்கம்!!!

நமது பாஷையின் முன்னேற்றமே நமது முன்னேற்றம். என்றைக்கு நமது பாஷையைப் போற்றாமல் விட்டுவிட்டோமோ அன்றைக்கு நம்மைச் சனியன் பிடித்துவிட்டான் என்பதை நாம் மறக்கவே கூடாது. தமிழ்ப் புலவர்களை யாவர்

என்று நாம் நினைத்து வருதல் வேண்டும். நாமெல்லாருங் கண்டதுவே காட்சி கொண்டதுவே கோலம் என்று மயங்கிக் குதூகலங்கொண்டு நம்முடைய உயர்நிலையாகிய நூல்களைப் போற்றாமல் பெரிய உத்தியோகத்திற்கும் பெரும் பட்டங்களுக்கும் ஈடுபெற்று, வாகனாதிகளிலே ஆடம்பரமாக ஏறிக்கொண்டு பவனி வந்து விலாப்புடைக்க உண்டு வருகின்றதைக்கண்டு நமக்குப்பின்னால் வரும் நிலைமைக்கு இரக்கங்கொண்டு நம்மைக் காப்பாற்ற வந்த குல தெய்வங்கள் என்று உணரக் கடவீர்கள். உங்கள் உயர்நிலை யாவரிடத்தில் இருந்து வருகின்றது? தமிழ்ப் புலவர்களிடத்திலன்றே. உங்களை அழிக்கவேண்டுமென்று தமிழ்ப் புலவர்கள் நினைத்து விடுவரேல் ஒரு நொடிப் பொழுதுக்குள்ளே அழித்துவிடுவர்.

நம்மைப் பெருமைப் படுத்துகின்றாரில்லை ; வயிறு நிரம்பச் சோறளிக்கின்றாருமில்லை. ஊனும் உடையும் இல்லாமல் நாம் ஏன் பாடுபட்டு வருதல் வேண்டும்? இன்றைக்கே நம்மிடத்திலுள்ள நூல்களையெல்லாம் எரித்துவிட்டுப் பிற வேலைகளைப் பார்த்துச் சுகமாக இருப்போம் என்று தமிழ்ப் புலவர்கள் எண்ணிவிட்டால் உங்கள் கதி தான் எவ்வாறு முடியும். தமிழர் என்று உங்களை எப்படிச் சொல்லிக்கொள்வீர்கள். ஆங்கிலேயர் என்று உங்களைச் சொல்லிக்கொள்வீரேல் அவர்கள் சும்மா விட்டு விடுவார்களா?

ஆங்கில வுடைகளை யுடுத்திக்கொண்டு ஆங்கிலப் பேச்சைப் பேசிக்கொண்டு ஆங்கில நூல்களைக் கற்றுக்கொண்டு ஆங்கிலக் கவிதைகளைப்பாடிக் கொண்டு வந்தால் நீங்கள் ஆங்கிலேயர்களாய் மாறி விடுவீர்களோ. நல்ல யோஜனை ; நல்ல புத்தி. திருவள்ளுவர் போன்ற புண்ணியவான்கள் மரபிலே நீங்களா உதித்தல் வேண்டும். குரங்கின் கையிலே பூமாலையைக் கொடுத்தது போல உங்கள் கையிலே தமிழ் நூல்களைக் கொடுத்துவிட்டார்களே. அந்தோ பாவம்! பாவம்!! பாவம்!!! நமது பின் சந்ததியார் எங்கள் பாஷை யாது, எங்கள் நூல்கள் எங்கேயென்று நம்மைக்கேட்டால் நாம் அவர்களுக்கு எவ்வகை விடையளிப்போம். நம்மை இகழ்வார்களே ஒறுப்பார்களே. இதனையாவது நாம் சிந்தித்து நடக்கலாகாதா?

நமது முன்னோர்கள் காடுகளையெல்லாம் திருத்தி, வயல்களையுந், தோட்டங்களையும், நாடுகளையும், நகரங்களையும், மாடமாளிகை கூடகோபுரங்களையும், இன்ன பிறவற்றையும் நமக்கு அளித்திருக்கின்றனர் என்பதை நாம் மறக்கலாகுமா? நாம் இவற்றையெல்லாம் ஒழுங்குபெற நடத்துவதற்கென்றே பல நூல்களையும் உண்டாக்கி வைத்தனர். அவர்கள் இஷ்டப்படி அவர் செய்துவைத்த நூல்களைப் புறக்கணித்துவிட்ட நாம் அவர் பொருள்களை அநுபவித்து வருதற்கு எங்ஙனம் உரியவர்களாவோம். அவர் நியமித்தவற்றைப் புறக்கணித்த நாம் அவர் நாட்டில் இருந்து வருதல் முறைமையோ? பாபமாகாதா? தெய்வந்தான் பொறுக்குமா? நமது ஆட்சி, வன்மை, அறிவு, பரம்பரை முதலியன வளர்வடையுமா?

நாயன்மாரும் ஆழ்வார்களும்.

[துணைப் பத்திராதிபர்]

தமிழ் வேதங்கள் என்று சிறப்புற்று விளங்குவன நாலாயிரப்பிரபந்தம் தேவாரம் திருவாசகம் திருக்குறள் முதலியன ; இவற்றைப்பாடியவர் ஆழ்வார்களும் நாயன்மார்களும்; இவைகள் பக்திரஸம் பொழிவனவாயும் தத்துவங்களை இனிமையாய் எளிதில் போதிப்பனவாயும் இருப்பதோடு காவியப் பெருமையும் மொழியழகும் வாய்ந்தனவாய் இருக்கின்றன ; இவைகளைப் பாடியவரில் சிலர் கடைச்சங்கக் காலத்திலும் அதற்கு முன்னும் இருந்ததாக அவர்கள் பாடியிருக்கிற செய்யுட்களின் அமைப்பினின்றும் கர்ண பரம்பரையாய் வழங்கும் வழக்கினின்றும் தெரியவருகிறது. ஆயினும் பெரும்பாலரும் சங்கச்செய்யுட்களின் காலத்திற்குப் பிற்பட்டவராய், அக்காலத்தில் மழுங்காதிருந்த புத்த சமண மதங்கள் பின் மழுங்கி சைவ வைஷ்ணவ மதங்கள் மறுபடி மேற்கிளம்பியபோது பாடியவரென விளங்குகின்றது. இவர்கள் பாடல்களில் புத்தர் சமணர்களைப் பழித்துப் பாடப்பட்டிருப்பது இதற்கு ஓர் அத்தாக்ஷி.

இந்த ஆழ்வார்கள் நாயன்மார்கள் முதலியோரின் ஜீவிய சரித்திரங்களைப்பற்றி நமக்கு எவ்வளவு தெரியும்? அவர் பாடிய பாடல்களினின்றும் அவர்களைப்பற்றி நாம் என்ன அறியக்கூடும்? சரித்திர ஆராய்ச்சி செய்பவர் இவர்களைப்பற்றியும் இவர்கள் இருந்த காலத்தைப்பற்றியும் நமக்கு என்னென்ன தெரிவிக்கிறார்கள்? இவர்களின் கவித்திறனும் பாடல்களின் பெருமையும் எவ்வகைப் பட்டன? என்றவற்றை அறிய முயல்வது இயல்பே. கர்ணபரம்பரையாக வழங்கிவரும் வரலாற்றை பரீக்ஷிக்காமல் ஏற்றுக்கொள்வது தற்காலத்தியர் மதம் அல்ல ; அதற்கிணங்க, அவைகளை சோதிக்கப் புகுமுன், இதுவரை வழங்கிவரும் வரலாறு என்ன என்பதைக்குறித்தும் இப்பெரியோர் பாடிய பாடல்களினின்றும் அவைகளுக்கு அநுகுணமாய் யாதேனும் விளங்குகின்றதா என்றும் கவனிப்பது அவசியமேயாகும். இந்த நோக்கங்களைக்கொண்டு அறுபத்திமூவரினுடையவும் பன்னிரு ஆழ்வார்களினுடையவும் சரித்திரங்களை 'தமிழ் உலகி'ன் பிற்பகுதிகளில் கூறத்தொடங்குவோம்.

"வெள்ளையர் அடிமை" வர்த்தகம்.

[வே. கா. ராமநாதன். B.A. B.L.]

இந்த வியாஸத்தின் தலைப்பெயர் மேல்நாட்டு 'நாவல்கள்,' அதுவும் ஆதுநிக [Modern-தற்கால என்று ஒருவாறு சொல்லலாம்] நாவல்களைப் படிப்போர் தவிர இதரர்களுக்கு எளிதில் பொருள் படாது. லண்டன், நியூயார்க், சிகாகோ, ஹாங்காங், சிங்கப்பூர், கல்கத்தா, பொம்பாய் அலெக்ஸாந்த்ரியா, பெர்லின், பாரிஸ் இந்நகர்களின் சிற்சில தெருக்களிலும் வீடுகள் சிலவற்றிலும் பகலெல்லாம் பதுங்கியிருந்து இரவில் வெளிவந்து கால் காசுக்கும் தம்மானத்தைப் பறிகொடுத்து இரண்டொரு வருஷங்களிலேயோ சற்றேறக்குறையவோ தருமாஸ்பத்திரிக்குக்கொண்டு செல்லப்பட்டுக் கடைசியில் அநாதைப் பிரேதமாய் இந்நரகவாஸத்தினின்றும் விடுபடும் பாக்கியம் பெறும் பெண்மக்களின் பரிதாபகரமான நிலைமையைப் பலர் கண்டிராவிட்டாலும் ஒரு போதாகிலும் கேள்விப்பட்டிருப்பார்களென்பது நிச்சயம்.

இப்பேதைகள் யார்? எங்கிருந்து வருகின்றனர்? இவர்கள் ஏன் கண்ணைத் திறந்துகொண்டே இப்

படுகுழியில் விழுகின்றனர்? இந்நரக வாஸத்துக்கு இவர்கள் தாமே ஸ்வயமாய் இஷ்டப்பட்டவர்களா? அல்லது பிறரால் வஞ்சிக்கப்பட்ட நிரபராதிகளா? இம்மண்ணுலக யமபாதையை நிவர்த்திக்க யாதாயினும் மார்க்கம் உளதோ? இத்யாதி விஷயங்களை இவ்வியாஸத்தில் ஆராய்ச்சி செய்ய யான் புகுவதைப் பலர் ஒப்பமாட்டார்களென்பதை யான் அறிவேன். உள்ளதைப் பிறர் எடுத்துச் சொல்வதென்றாலே இஷ்டப்படுதலில்லாத மானிடத்தன்மை உள்ளதை பிறர் சுட்டிக்காட்ட ஒப்புக்கொள்வதென்றால் எளிதில் ஆகக்கூடிய காரியமன்று. கடைசியாக நம் பரதகண்டத்திலும், இந்த நவநாகரிகத்தின் பலனாகிய இக்கொடுமை துறைமுகங்களிலும், தலைநகர்களிலும், மலைப்பிரதேசங்களிலுள்ள சீதவாஸப் பட்டணங்களிலும் அதி தீவிரமாய் விருத்தியடைந்து வருகிறது. மேனாட்டு நாகரிகத்தின் கொடிய இக்களைப்பூண்டு நன்றாய் வேரூன்றிவிடுமுன், நாம் அதைக் கிள்ளியெறிந்து ஜனசமூகத்தைக் காப்பாற்றிக் கொள்ளுதல் இன்றியமையாதது. அணைகோலுதலென்பது சிற்றாறுகள் ஒன்று சேர்ந்து வெள்ளமாய்ப் புரள்வதற்குப் பூர்வமே ஆகவேண்டிய அலுவலாகும்.

மேல் நாடுகளில், ஜனங்கள் தத்தம் வீட்டில் வேலை செய்து சரக்குகள் தயாராக்கிச் சந்தையில் விற்கும் முறை சென்ற இரண்டு நூற்றாண்டுகளாகத் தினேதினே க்ஷீணித்துத் தற்போது அடியோடு நசித்துவிட்டது. அம்முறைக்கு மாறாக ஆயிரம் பேர், பதினாயிரம்பேர்க் கணக்காக ஆட்டுமந்தையைப்போல—அவைகளாவது திறந்த வெளிகளில் நல்ல காற்றில் கூடுகின்றன; அவ்வாறுதல் கூடக் கிடையாது—எண்ணெய் வாஸனையும், புகைநாற்றமும், உஷ்ணகாற்றும் ததும்பிய இடத்தில், ராக்ஷஸ மாளிகைகளில் அடைக்கப்பட்டு ஸ்த்ரீ புருஷ வித்யாஸமின்றிப் பெரியோர் சிறியோர் வ்யவஸ்தையின்றிச் செறிந்துக் காலைமுதல் மாலைவரைச் சற்றுவது புத்தி விசாலப்படும் வகையில்லாமல், 'தெய்வந்தொழ' நேரமற்று, மனோசாந்தியென்பதே உண்டாவதற்கிடமில்லாமல், ஸதா 'கிர்' என்ற ஏக இறைச்சல் நிறைந்து காதைச்செவிடடிக்கும் இரும்பெனும் பேயின் வசப்பட்டு வெளியேறும் திறனறியாது மானிடவுருவங்கொண்டு உலவும் நடைப்பிணங்கள் குவிந்துகிடக்கும் 'மில்களும்' பாக்டரிகளும் கிளம்பியிருக்கின்றன. 'மில்கள்' என்னும் நவீனவஸ்துக்கள் நமது நாட்டிலும் புற்றீசலென்ன உண்டாய்க் கொண்டிருக்கின்றன. நாமும் நாகரிகமடைந்து விட்டோம்; குறைவில்லை; இத்தகைய மில்களில் வேலைசெய்யும் சிறுமிகள் பகல்முழுவதும் பெற்றோர், பெரியோர் சங்கமின்றித் தன்னந்தனியாய் மில்களில் தம் ஈடு சிறுவர்களுடன் கூடுவதும், வேலைசெய்து அலுத்துப் போயிருக்கும் மாலைவேளைகளில் அவ்வலுப்பை மறக்கும் வண்ணம் பயாஸ்கோப் முதலிய இருட்டறை நாடகவரங்குகள் செல்வதும், அந்தகாரத்தில் சல்லாபிப்பதும் சகஜமாகிறது. நாள்முழுவதும் சூரிய வெளிச்சமும் நல்லகாற்று மின்மையால் அவர்களுடைய தேகவலிமை குன்றி ஆரோக்கியமற்று, முகம் ஒரு பேய் வெளுப்பையடைய, காலத்துக்கு முன் பக்குவமடைந்து, மேல்நாட்டோர் அநுஷ்டிக்கும் சுயம்வர முறையைப் பெற்றோர் அநுமதியெனும் நாமகார்த்த நிபந்தனையைக் கூட ஒழித்துத் தாங்களே, உலக அனுபவமென்பது கிஞ்சித்தேனுமில்லாத பதினைந்து பதினேழு வயது சிறுமிகளே 'ஸினெமா' விலும் உலாவிடங்களிலும் அந்திவேளைகளில் தங்களைச் சந்தித்துப் போலிக்காதல் மொழிகளைச் செவிகளில் பொழியும் சிறுவர்களை உண்மையாகக்கொண்டு அவர்களுடன் சல்லாபித்து, அவர்கள் மணம்புரிவதாய்க் கூறும் பொய்வார்த்தைகளைச் சதமென நம்பி அவர்களுடன் அந்யோந்யம் பாராட்டிக் கடைசியில் காரியம் மிஞ்சியபின் கண்விழித்துத் தேள் கொட்டிய திருடனென்ன வெளிக்குச் சொல்ல அவமானப் பட்டுக் காந்தர்வ விவாஹபலனை ஆஸ்பத்ரியிலோ தருமசாலைகளிலோ விட்டொழித்து அப்போலிக்காதலர்களால் சந்தியில விடப் பட்டுத் தம் நண்பர்களிடமும் பெற்றோர்களிடமும் திரும்பிச்செல்ல மனந்துணியாதவர்களாய் முதல்படியில் காலை வைத்தவள் முற்றும் இறங்கிச்செல்வது தவிர்த்து வேறு விதியின்றி இக்கூட்டத்தைச் சேர்பவர்கள் ஒரு வகுப்பினர். போலிக்காதலர்கள் ரஹஸியமாய் வீட்டை விட்டு வெளியேறித் தாம் சுகமாய்க் கலியாணம் செய்து கொள்ளலாமென்று ஆசைகாட்ட, அதைநம்பி வீட்டை விட்டுக்கிளம்பி நள்ளிரவில் திக்குதிசை தெரியாத சந்துபொந்துகளிலெல்லாம் சென்று, கடைசியில் ஐந்து, பத்து இருபது அநாதைப் பெண்களை அடிமைகளாக வைத்துக் கொண்டு, விடர்கள் போக்குவரவுள்ள இல்லங்களுக்கு அழைத்துப்போய்க் கிரயத்துக்கு விற்றுவிட்டு 'இதோ இங்கேயேயிரு நான் போய் மணம் செய்விக்கப் பாதிரியை யழைத்துவருகிறேன்' அல்லது 'இங்கேயே இரு; இது என் ஆப்த நண்பர்வீடு, நாளைக்கு என் தகப்பனார் சம்மதிப்பை பெற்று உன்னை என் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறேன்' என்று போக்குக் காட்டிவிட்டுக் கம்பி நீட்டும் பாதகர்களால் வஞ்சிக்கப்படுவோர் ஒரு சாரார். முன்னர் இரண்டு வருஷங்களுக்குமுன் நம் ஹிந்துதேசத்தில், பிராஹ்மணர்களோ அல்லவோ, பிராஹ்மணர்களென்று சொல்லிக் கொண்டு வேற்றூர் வந்து சிலர் ஏழைவீட்டுப்பெண்களை ரூபாய் கொடுத்துக் கலியாணம் செய்துகொண்டு அவர்களை வடக்கே ஹைதராபாத் முதலிய மஹம்மதிய நாடுகளுக்குக் கூட்டிப்போய் அங்கே அப்பெண்களை மஹமதியர்களுக்கு விற்றுப்போடுகிறார்களென ஒரு பெரிய கூக்குரல் கிளம்பிக் பத்திரிகைகளில் நிருபப்ரதி நிருபங்கள் அச்சிடப் பட்டுவந்தன. இது நிற்க இதற்குமுன் நள்ளிருளில் "குடிசெட்டி" இல்லங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறிய பெண்களைப் பற்றிப் பேசுவோம். இவ்வாறு கொண்டுவரப்பட்ட சிறுமிகளை ஏமாற்றியோ அல்லது பலாத்காரப்படுத்தியோ, கள், சாராயம், முதலிய மதுபானங்களைப் பருகச்செய்து மயக்கம் வந்தவுடன் ஓர் அறைக்குள் கொண்டுபோய், அங்கே அவர்களுடைய வஸ்திரங்களையெல்லாம் களைந்து, அவர்கள் தம் நூதனவாழ்க்கைக்கு உடன்படும் வரை அவர்களையடித்தும், உதைத்தும், பட்டினிபோட்டும், பலவாறு ஆற்றொணாத் துன்பங்களுக் குட்படுத்தியும், சித்ரஹிம்ஸைகள் செய்கின்றனர். அவ்வீதிகள் வழியாய்ச் செல்லும்போலீசார்களையாவது கூக்குரலிட்டழைக்கலாமென்றால், அவர்களும் அவ்வீட்டுக் குரியவர்களை யண்டி லஞ்சம் வாங்கிப் பிழைப்பவர்களாதலால் தப்ப வகை யாதுமின்றி, இதற்குள் இவர்களைப் பலாத்காரமாகச் சில விடர்கள் மான மழிக்கப் பிராணனை விட மனமில்லாமல் கடைசியாக அவ்வீட்டுக்காரர்கள் ஆட்டுவிக்கும் கோர ஆட்டங்களுக்கெல்லாம் உடன்படுகின்றனர். இவ்வாறாகக் சேர்க்கப்பட்டிருக்கும் பெண்கள் சிற்சில ஸமயங்களில் துறைமுகங்களில் கப்பல்கள் ஏராளமாய் வரும் நாட்களில் ஓரிரவில் இருவது ஆடவர்களுடன் சல்லாபம் செய்யவேண்டிவருகிறது. தாங்கள் கூடும் விடர்கள் கொடுக்கும்

பணமெல்லாம் வீட்டுச் சொந்தக்காரர்களாகிய எஜமானர்களுக்குச் சேர்கின்றது. இவர்கள் காண்பதெல்லாம் வயிற்றுக்குச் சோறும், கட்டத்துணியுந்தான். அதுவும் உயர்ந்த ஆடைகளென்றால் இவர்களுக்கு வேண்டுமாயினுஞ் சரி, அல்லாவிட்டாலுஞ் சரி, எஜமானர்கள் அவற்றை அதிக விலைகொடுத்து வாங்கி அவர்கள் கணக்கிலெழுதி அவர்களைத் தம் கடன்காரர்களாக்கிக் கொள்கிறார்கள். இப்பேதைகள் தப்பித் தவறித் திருட்டுத்தனமாகவோ கெஞ்சியோ ஏதாவது இரண்டொரு ரூபாய்ச் சம்பாதித்தால் அந்த ரூபாய் மேற் கூறிய கடனுக்குச் செல்லாக வேண்டியிருக்கிறது; இவர்களுக்குத் தக்குவதில்லை. இவர்களைப் போஷிக்கும் புண்யவான்கள் இவர்கள் இஷ்டப்படாத உடுப்புகளையும் சாமான்களையும் வாங்கி இவர்கள் தலையில் கட்டி இவர்களை என்னென்றைக்கும் தம் கடன் காரர்களாகவே வைத்துக்கொள்கிறார்கள். இவ்வாறாக இப்பேதைகளை வீட்டில் வைத்துப்போஷிப்பது மூன்று நான்கு வருஷங்களே. அதற்குள் இவர்கள் பற்பல மேக ரோகங்களுக்குட்பட்டு உடம்பு இளைத்து, பலங்குன்றி, ரூப லாவண்ய மெல்லாம் அடியோடு பாழாகிப் பார்ப்பதற்கு அருவை உண்டாகும்படி கண்கள் குழிவடைந்து, கண்களைச் சுற்றி வளையம் போன்ற கறுப்புக் கோடுகள் தோன்றி, கழுத்து முதலிய அங்கங்கள் எலும்பு தெரிய, இளைத்து இருபது வயது மாது அறுபது வயது கிழவியினும் கேடுகெட்டுக் கன்னம் சுருங்கி, நாலைந்து வருஷ காலத்துக்குள் நடையும் நொண்ட வேண்டிய ஸ்திதி வந்துவிடுகிறது. அக்காலம் வந்தவுடன் வீட்டுக் காரர்கள் இவர்களைக் காலாலுதைத்து வீதிகளில் விரட்டிவிடுகின்றனர். இன்னொரு விஷயம்; இப்பேதைகள் இந்நாலைந்து ஆண்டுகளுக்குள் இவர்கள் கூடும் ஹீனஜாதி மக்களுடைய ஸஹவாஸதோஷத்தினால் மதுபானங்கள் ஆரம்பமாகிக் கடைசியில் உடம்பு இளைத்து ஜீரணசக்திக் குன்றுங் காலை, அன்னம் உட்கொண்டு ஜீரணிக்கச் சக்தியின்மையாலும் இரவெல்லாம் கண்விழித்தலாலும், தெருத்தெருவாய்க் காற்றிலும் பனியிலும் சுற்றியலைவதாலும் உண்டாகும் அலுப்பை மாற்றிக்கொள்வதற்கும் மனதில் சமுத்திர அலையென மோதிக் கொண்டிருக்கும் துக்கத்தையும் மனோவேதனையையும் ஒருவாறு மறந்திருக்கவும் தோன்றிய போதெல்லாம் மதுபானம் செய்வது சர்வ சாதாரணமாய் விடுகிறது. வீதிகளில் துரத்தப்பட்ட பின், கட்டத் துணியின்றி, வயிறு நிறைய ஆகாரமின்றி, இரண்டரை கால் ரூபாய்க்குக் கூடத் தம் மானத்தை விற்றும், உடம்பு அசௌக்கியமுற்றுப் பயங்கரமான வியாதிகளால் பீடிக்கப்பெற்றிருப்பதால், வயிறு நிறைய ஆகாரத்துக்குக்கூடப் போதுமான பணமின்றிக் கால் பட்டினி அரைப்பட்டினி கிடந்து பசிபாதையை மறக்கும்வண்ணம் மதுபானஞ்செய்து தெருக்களில் திரியுங்காலைப் போலிசார் கைத்தடியால் பலமுறை அடிக்கப்பட்டோ அவர்களால் சிறையிலடைக்கப்பட்டோ, இல்லாவிட்டால் யாருமற்ற அநாதையாய் ஆஸ்பத்ரிசென்று அங்கும் பணமில்லாத கொடுமையினாலும் தமது பூர்வ விருத்தாந்த மகிமையாலும் யாரும் கவனியாதொழிய, அநாதைப் பிரேதங்களாய் வைத்ய சாஸ்திரக் கல்லூரி மாணவர் சஸ்திரத்துக்கு இவ்வுடலை யர்ப்பித்து இந்நரகத்தினின்றும் விடுபடுகின்றனர்.

சில கங்காணிகள் ஏழைச்சிறுமிகள் வீடுகள்சென்று அவர்களுடைய தகப்பனோ தமயனோ காயம்பட்டோ அல்லதுவேறு ஆபத்துக்குட்பட்டோ இருக்கின்றனரென்று, அவர்களை கையுடன்கூட்டிவரச் சொன்னதாகப் பொய் வார்த்தை பேசி அவர்களைவண்டியிலேற்றிக்கொண்டு சுற்றிச்சுற்றிச் சந்துபொந்துகள் வழியெல்லாம் சென்று, கடைசியில் "குடிசெட்டி" வீட்டிலிறக்கி, வீட்டுக்குரியவர்களுக்கு அவர்களை விற்றுப் போடுதும் உண்டு; சில பெண்கள் தாம் வேலைசெய்யும் ஷாப்களில் அங்கு உடன் வேலைசெய்யும் தொழிலாளிகளினாலாவது அல்லது கடைக்கு எஜமானர்களாலாவது கெடுக்கப்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் வயிற்றுக்குப் போதுமான ஆகாரமில்லாத கொடுமையினாலோ அல்லது வயது முதிர்ந்த பெற்றோர்கள், பாலிய பருவமுடைய சகோதர சகோதரிகளைக் காப்பாற்றும் நிமித்தம் இத்தொழிலுக்கு உடன்படுவோர் ஒரு வகுப்பார். வேலை நிறுத்தங்களினால் ஜீவன உபாயமின்றி ஒரு வேலையும் கிடைக்காமல் கடைசியாக இப்படுகுழியில் வீழ்வோர் சிலர். குடிகாரச் சோம்பேறிப் பையல்களைப் புருஷனாகப்பெறும் நிர்ப்பாக்யவதிகள் புருஷன் சம்பாதிக்காது தங்களை வருத்த, தாம் பெற்றெடுத்த குழந்தைகளைப் போஷிக்கும் நிமித்தம் இத்தொழிலுக்குடன்படுவோரும், திருவிழா, பண்டிகை சமயங்களில் தெருக்களில் ஜன நெருக்கத்தினால் தம் பந்துக்களினின்று பிரிந்து அலையுங்காலைத், துன்மார்க்கர்களால் மோசமடைவோருமாக பல வேறு மார்க்கமாய் இந்நிரபராதிகளின் தொகை உலகத்தில் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

ஐ. ஸி. எஸ். பரீக்ஷை

[S. பட்டாபிராமன், M.A., பத்திராதிபர்]

சமீபத்தில் இங்கிலண்டில் நடந்த ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் ஸ்ரீமான் N. மகாதேவய்யர் முதலில் தேறியிருப்பதாய் சில தினங்களுக்குமுன் அறிவிக்கப்பட்டது. இதன் சம்பந்தமாய் சென்னை வாசிகளான நாமனைவரும் மிகவும் சந்தோஷமடைவோம். ஐ. ஸி. எஸ். இல், கடைசியான இப் பரீக்ஷையில், இவ்வாறு முதன்மையாகத் தேறியதால், இவர், தனக்கேயன்றி, நமது மாகாணத்திற்கே, சிறந்ததோர் கௌரவத்தை சம்பாதித்திருக்கின்றார். அடுத்த ஜனவரி மாதத்திற்குள் இந்தியாவுக்குத் திரும்பி வந்து, பங்காளத்தின்கண் "கலெக்டர்" உத்தியோகத்தில் அமர்வார். இவ்விஷயமாக, இவரது தகப்பனாரான ஸ்ரீமான் நீலகண்டய்யருக்கும், மற்றும் கன்னிவாடி ஜமீன்தார் N. ராதாகிருஷ்ணய்யர், ஸ்ரீமான். P. V. சுப்பிரமணிய அய்யர் இவ்விருவர்களுக்கும் நமது மனப்பூர்வமான ஆனந்தத்தைத் தெரிவிக்கின்றோம்.

இங்கே நாம் ஓர் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்வதில் பாதகமில்லை. நமது ராஜதானியிலும், மிகப்பெரிய குடும்பங்களில் உதித்தவர்கள் படிப்பிலும், தைரியத்திலும், ஊக்கத்திலும் முதன்மை வகிக்கவேண்டுமென நாம் விரும்புகிறோம். பெரிய மனுஷ்யர்கள் இருக்கும் ஒவ்வோரிடத்திலும், சென்னையில் வீசும் ஒளி, எங்கும் வீசவேண்டும். முற்றிலும் திரவியத்தால் மாத்திரம் மேன்மையில்லை யென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ! பெங்கால் மாகாணத்திலுள்ள ஜமீன்தார்களுள் பலர் மிக்கக் கியாதிபெற்றவர்களாய் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலும் பணமுள்ளவர்கள் எல்லா விஷயங்களிலும் ஏன் சமர்த்தர்களாய் இருக்கமுடியாமல் போகவேண்டும்? சென்னையிலிருக்கும் சில பிரபுக்கள் முன், பெரும்பான்

மையோர் கம்பீரமாய் நடப்பதைவிட்டு, தலைகுனிவதேன்? உள் நாட்டிலிருப்பவர்கள் கல்வியிலும், ஆண்மையிலும், ஆற்றலிலும் கொஞ்சமும் பின்வாங்காது, முன்வரவேண்டும். ஒவ்வொரு பெரிய வம்சத்திலும், படிப்பில் தேர்ச்சியடைந்தவர்களாய், தேச கைங்கரியத்திற்காகப் பல துறைகளில் பலர் இறங்கி லோகோத் கிருஷ்டர்களாய் விளங்கவேண்டுமல்லவா? கணியூர் முதலிய விடங்களில் இருந்து வருபவர்கள் தேசத்திற்கு ஆபரணங்களாக விளங்குவார்களேயாகில், அஃதெவ்வளவு அழகாயிருக்கும்!

மேலும், மற்றொரு விஷயத்தைப்பற்றிப்பேச நாம் எண்ணங்கொண்டோம். "கவர்மெண்ட் ஸெர்விஸ்" என்பதில் ஒரு பாபமும் இல்லை. ஆகிலும், நமது சிறுவர்கள் கைத்தொழில்களிலும், ஸையன்ஸிலும் அதிசிரத்தையுடன் படித்து, நம்முடைய நாட்டைக் கடைத்தேறும்படி செய்வதே இக்காலத்தில் மிகவும் முக்கியமெனக் கருதுகிறோம். ஸ்ரீமான் N. R. அய்யரைப்போன்றவர்கள், இச்சென்னை மாகாணத்தில் எங்கும் வியாபாரம் செழித்தோங்கும்படி மிகவும் எளிதில் செய்யக்கூடும். ஆதலால், இந்த ஐ. ஸி. எஸ். பரீக்ஷையைக்காட்டிலும், கைத்தொழில் படிப்பில் இத்தேர்ச்சியடைந்திருப்பாராகில், மிஸ்டர் N. மகாதேவய்யரால் இந்நாட்டிற்குப்பிரயோஜனங்கள் பல உண்டாகுமல்லவா? பம்பாய் ராஜதானியில் "டாடா"க்கள் வியாபாரத்தில் சீமான்களாய் இருப்பதுபோலவே, நமது மாகாணத்திலும் மிஸ்டர் N. R. ஐயர் முன்வந்து நின்று, கைத்தொழிலை அபிவிருத்திசெய்வது நிரம்பவும் யுக்தமென நாம் நினைக்கின்றோம்.

புயற் காற்று

[V. நாராயணையர் M. A., M. L.]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நத பாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பிவரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவியெனவும் அவளும் கல்வியாணகாலத்தில் தன்புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறுஒருவர் மனைவி என்றும் அறிய,அவளைப்பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும், வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி நாடி கல்வியாணத்திற்கு உடன்பட்டதும்; கல்யாண தினமும் குறிப்பிடப்பட்டு,உறவினர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பிய பின்னர், கமலாவை பள்ளிக்கூட விடுமுறை நாளானதால் வீட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென்று உபாத்தியாயினியிடமிருந்து கடிதம் அடைய,கமலாவின் கதையை இதுவரை வெளியிடாத இராமேசன் ஒன்றும் தோன்றாது கலங்கி, பிறகு கல்யாணதினத்தை ஒதுக்கிவைக்க அந்நதபாபுவை வேண்டியதும், அவர் அதற்கு கடைசியாக உடன்பட்டுவிட்டதும்; பிறகு வெளியூருக்குச் சென்றிருந்த யோகேந்திரன் வந்து கல்யாண காரியங்கள் நடைபெறாததைக் கேட்டு, கவலையுற்று, அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று, அங்கு பள்ளிக்கூடமிருந்து வந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து, இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடியதும்; பிறகு அக்ஷயனுடன் தன் வீட்டிற்கு வந்து சந்தேகங்களை வெளியிட்டு, அந்நத பாபுவையும் ஹேமநளினியையும் வருந்தச் செய்ததும், சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை)

அன்றிரவே, ஒன்பது மணி சுமாருக்கு, இராமேசன் கமலாவை (கல்கத்தாவிலுள்ள ரயில்வே ஸ்டேஷனை) சியால்தா ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றான். வண்டிக்காரன் நேர்வழியாகப் போகாமல், இராமேசன் சொற்படி, காலுதோலாவிலுள்ள சந்து பொந்துகள் வழியே சுற்றிச் சென்றதால் இராமேசன் கமலாவுடன் ரயிலுக்குப் புறப்பட்டுப் போவது யாருக்கும் தெரியாது; அப்படிச் சுற்றிப்போகும்போது வண்டியினின்றும் இராமேசன் வெளியே உற்றுநோக்குபவனாய் ஏதோ ஒரு வீடு வந்ததும் பெருமூச்செறிந்தான். அந்தவீடு, தான் முன்பார்த்தபோது போலவே இப்போதும் மாறுதல் ஒன்றுமின்றி விளங்கிற்று.

அவன் பெருமூச்செறிந்தது கமலாவை தூக்க மயக்கத்தினின்றும் எழுப்பியது. என்ன சமாசாரம் என்று கேட்டாள்; ஒன்றுமில்லை என்று இராமேசன் அமர்ந்திருக்கவே, வண்டியும் ரயிலடிக்குச் சென்றது.

ரயிலடிக்கு சீக்கிரமே வந்து சேர்ந்தார்கள்; உடனே உட்சென்று, அவர்களுக்கு இராமேசன் முன்னதாக அமர்த்தியிருந்த இரண்டாம் வகுப்பு வண்டியில் ஏறி உட்கார்ந்தார்கள். கீழ்த்தட்டில் கமலாவுக்குப் படுக்கையை விரித்தான் இராமேசன்; பிறகு விளக்குகளை அணைத்து, ஜன்னல் கதவுகளையையும் மூடிவிட்டு, "தூங்க நேரமாயிற்று, படுத்துக்கொள்" என்று கமலாவைப் பார்த்துச் சொன்னான் இராமேசன்.

"நான் இப்படி உட்கார்ந்து ரயில் புறப்படும் வரை வெளியே பார்த்துக் கொண்டிருக்கக் கூடாதா; பிறகு தூங்கலாமே" என்றாள் கமலா. சரியென்று இராமேசன் சம்மதிக்கவே, தன் முகத்தை மறை துணியால் மூடிக்கொண்டு வெளியேயுள்ள ஜன நெருக்கத்தையும் சந்தடியையும் ஜன்னலண்டையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள் கமலா. இராமேசனோ வண்டியின் மத்தியில் உட்கார்ந்து மெய்மறந்து எதைப்பற்றியோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். ரயில் புறப்படும் சமயத்தில் ஓடோடிவரும் பிரயாணி ஒருவன்மேல் அவன் திருஷ்டி விழுந்தது. அந்தப் பிரயாணியின் உருவ அவயவங்களைப் பார்த்தால் அவனுக்குத் தெரிந்தவன்போலத் தோன்றிற்று. அதே நிமிஷத்தில் கமலாவும் வாய்விட்டுச் சிரிக்கவே, வெளியியே உற்று நோக்கிய இராமேசன், புறப்பட்டுக் கொண்டிருக்கும் ரயில் வண்டியில் ஏறுவதற்காக ஸ்டேஷன் உத்தியோகஸ்தர் ஒருவருடன் சண்டையிடும் அந்த பிரயாணியைக் கண்டான்; அவன் கடைசியில் வண்டியில் ஏறயதையும் கவனித்தான்; அவனுடைய மேல்வேஷ்டி மட்டும் அவனைத் தடுத்த அதிகாரியின் கையில் தங்கிவிட்டது, அதை வாங்குவதற்காக அவன் முகத்தை வெளியே வளைத்துக் கைகளை நீட்டும்போது அவன் முகம் இராமேசனுக்குத் தெரிந்தது. ஆம், அவன் அக்ஷயன் தான் சந்தேகமில்லை.

பிரயாணியும் அதிகாரியும் இப்படி சண்டையிடுவதைக் கண்ட கமலாவுக்கு சிரிப்பு அடங்க கொஞ்ச நேரமாயிற்று.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினுல், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனும்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.
Telegrams : "Adimoorthi" Benares.

கதர் ! கதர் !! கதர் !!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை !!!

பெயர்பெற்ற மோரதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	×25"	ரூ 2½	முதல்	ரூ 3	வரை
,, 2.	12 ,,	×27"	,, 4	,,	6	,,
,, 3.	16 ,,	×34"	,, 6	,,	9	,,
,, 4.	18 ,,	×36"	,, 8	,,	12	,,
,, 5.	20 ,,	×44"	,, 11	,,	13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: **'Shree'**

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ 4½	முதல்	ரூ 6	வரை
9½ ,,	× 40"	,, 3	,,	5	,,
3 ,,	× 1½ கஜ	,, 2	,,	3	,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக்கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

GOOD SEEDS

As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment. We have just the right kind of seeds for Indian climate both flower and vegetable.

Beautifully illustrated large descriptive catalogue free on application. (Please mention this paper when writing and correspond in English only.)

Pestonjee P. Pocha & Sons
Seed Merchants, POONA.

The United India Life Assurance Co., Ltd.
Head Office: Madras
(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டானைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராகச் சேர்ந்து நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ1000 பாலிஸிக்கு ரூ15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
Manager.

K. S. MUTHIAH & Co.,
Silk House, Benares City.
Branches **:—MADRAS & TINNEVELLY.**

எங்களிடம் சகல விதமான பட்டு பீதாம்பர புடவைகள், நாகரீகமான புதிய மாதிரி புடவைகள் (நவீன கலர்களில்) ரவிக்கை குட்டைகள், வெண்பட்டு தினுசுகள், நார்மடி தினுசுகள், ருத்திராக்ஷ மாலைகள், முதலிய சகல தினுசுகளும் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். உடனே எங்கள் கேட்லாக்கை தருவித்து பாருங்கள்.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
சில்க் ஹவுஸ், காசி.
பிராஞ்சு:—தபாற் பெட்டி 99, சென்னை.
போன் 1216 சென்னை.